**செய்தி வெளியீடு எண்: 235** **நாள்: 27.03.2020**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க தீவிர நடவடிக்கைகளை பல்வேறு துறைகள் மூலம் மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, ஊரடங்கு உத்தரவினால் பொது மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய சேவைகளும் தடையின்றி கிடைக்கவும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளைக் கொண்ட 9 குழுக்கள் ஏற்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதன்படி ஏற்படுத்தப்பட்ட குழுவின் முதற்கூட்டம் இன்று (27.3.2020) சென்னை, தலைமைச் செயலகத்தில் அரசு தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அவர் பேசும் போது தெரிவித்ததாவது,

முதல் குழுவில், முனைவர் ப.செந்தில்குமார் இ.ஆ.ப., முனைவர் அதுல்யா மிஸ்ரா இ.ஆ.ப., திரு.பங்கஜ் குமார் பன்சல் இ.ஆ.ப., திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா இ.ஆ.ப., ஆகியோர் மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புப் பணிகளையும், பிற மாநிலங்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், கொரோனா வைரஸ் தொடர்பான 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையும் இவர்களது கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்றும்,

இரண்டாவது குழுவில், திரு.நா.முருகானந்தம் இ.ஆ.ப., திரு.வி.அருண் ராய் இ.ஆ.ப., திருமதி.அனு ஜார்ஜ் இ.ஆ.ப., டாக்டர் எஸ்.அனீஷ் சேகர் இ.ஆ.ப., ஆகியோர் அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி தொடர்பாகவும், பிறமாநிலங்களுக்கு இடையேயும், மாநிலத்திற்குள்ளேயும் அத்தியாவசியப் பொருட்கள் நகர்வினை உறுதி செய்ய வேண்டும் என்றும்,

மூன்றாவது குழுவில், திரு.தயானந்த் கட்டாரியா இ.ஆ.ப., திரு.ககன்தீப் சிங் பேடி இ.ஆ.ப., திரு.பி.தாமரைக்கண்ணன் இ.கா.ப., ஆகியோர் அத்தியாவசியப் பொருட்கள்

மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் செல்வதை கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் என்றும்,

நான்காவது குழுவில், திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., முனைவர் பொ.சங்கர் இ.ஆ.ப., திரு.தீபக் ஜேக்கப் இ.ஆ.ப., ஆகியோர் ஊடக ஒருங்கிணைப்புப் பணிகளையும், பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்புப் பற்றி துண்டு பிரசுரங்கள், ஒலிபெருக்கி போன்றவைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

ஐந்தாவது குழுவில், டாக்டர் கே.கோபால் இ.ஆ.ப., டாக்டர் பி.சந்திரமோகன் இ.ஆ.ப., திரு.சு.நாகராஜன் இ.ஆ.ப., ஆகியோர் கொரோனா வைரஸ் பரவுவதை கண்காணிப்பதோடு, தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவையான உபகரணங்களுடன் கூடிய தனிமைப்படுத்தப்பட்ட சிறப்பு வார்டுகள் அமைப்பதை உறுதி செய்யும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும்,

ஆறாவது குழுவில், திரு.எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப., திரு.தெ.சு.ஜவஹர் இ.ஆ.ப., திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ் இ.ஆ.ப., ஆகியோர் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லும் வாகனங்கள் தடையின்றி செல்ல ஒருங்கிணைப்புப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்,

ஏழாவது குழுவில், டாக்டர் பி.உமாநாத் இ.ஆ.ப., முனைவர் டி.ஜெகந்நாதன் இ.ஆ.ப., திரு.இ.டி.சாம்சன் இ.கா.ப., ஆகியோர் கொரோனா வைரஸ் தாக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்துவதோடு, அவர்களேடு தொடர்பில் இருந்தவர்களை கண்டு பிடித்து அவர்களையும் தனிமைப்படுத்தி கண்காணிக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சையும் கிடைக்க ஏற்பாடு செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்,

எட்டாவது குழுவில், திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா இ.ஆ.ப., திரு.ஹர்மந்தர் சிங் இ.ஆ.ப., டாக்டர் க. மணிவாசன் இ.ஆ.ப., ஆகியோர் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும்

கிராமப்பகுதிகளில் கிருமிநாசினி தெளிக்கும் பணி மற்றும் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்படுவதை கண்காணிக்க வேண்டும் என்றும்,

ஒன்பதாவது குழுவில், திரு.ச.கிருஷ்ணன் இ.ஆ.ப., டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., திரு.வே.விஷ்ணு இ.ஆப., ஆகியோர் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியோரது நிவாரணப்பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்றும், தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள், வயது முதிர்ந்தோர், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உதவும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**